Registered No. M. 2330 "SIDDHANTHAM"
Vol. 40—No. 11

சித்தாந்தம்

சைவ சித்தாந்த மகா சமாஜத் திங்கள் வெளியீடு

'தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்து கிடப்பதே'

மலர் 40 | பிலவங்க கார்த்திகை 1967 நவம்பர் | இதழ் 11

உள்ளுறை

	பக்கம்
பழைய மாயூரப் புராணம் ...	318
புறவார் பனங்காட்டூர் ...	320
திருவருட் பயன் ...	322
தொல்காப்பியரும் சமயச்சாரியர்களும் ...	327
உடற் கூறு ...	337
திருப்போரூர்ச் சந்நிதி முறை ...	339
மதிப்புரை ...	342
மணி விழா ...	344

பத்திராசிரியர்: மு. அருணாசலம், எம். ஏ.,
உதவிப் பத்திராசிரியர்: வித்துவான் அம்பை. இரா. சங்கரன்.
சைவ சித்தாந்த மகா சமாஜம்,
12, கிழக்கு மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4.

சமாஜச் செய்திகள்

செயற்குழுக் கூட்ட அறிக்கை

26—11—67 ஞாயிற்றுக்கிழமை காலை 9-30 மணிக்கு சமாஜ அலுவலகத்தில் செயற்குழுக் கூட்டம் நிகழும். மாதக்கணக்கு சரிபார்த்தல், ஆண்டுவிழா, சமாஜத்தேர்வு முதலிய பல பொருள்கள் பற்றி முடிவுகள் செய்யப் பெறும். செயற்குழு உறுப்பினர்கள் யாவரும் தவருது வருமாறு கேட்டுக்கொள்ளப்பெறுகிருர்கள். (செயலாளர்)

இவ்வாண்டு நவம்பர் மூன்றும் வாரம் சனி, ஞாயிறுகளில் நடைபெற இருந்த சைவத் தேர்வுகள் சில காரணங்களால் ஒத்தி வைக்கப்பெற்றுள்ளது. நடைபெறும் தேதி முதலியன பின்னர் தெரிவிக்கப் பெறும்.

சமாஜ ஆண்டு விழா சென்ற மாதம் குறித்துள்ள வண்ணம் திருவெண்காட்டில் நடைபெறும். விரிவான நிகழ்ச்சிநிரல் அடுத்த இதழில் வெளி வரும்.

நம் சமாஜச் சார்பில் 29—10—67 மாலை சைவப் பெரியார் திரு. ச. சச்சிதாநந்தம் பிள்ளை அவர்களுக்கு மயிலை கபாலீச்சுரத்தில் விசேட வழிபாடு நிகழ்ந்தது. P. திருஞானசம்பந்தம் எம். ஏ., எல். டி. அவர்கள் தலைமையில் திரு. அய்யா சுப்பிரமணிய முதலியார், டாக்டர் கே. சிவராமன் (வாரணசிப் பல்கலைக் கழகம்), திருவாசகமணி K. M. பாலசுப்பிரமணியம், திரு. சி. வடிவேல், திரு. K. L. பழனிசுவாமி முதலிய பெருமக்களும், கரூர் அரங்கநாதம் பேட்டை திருஞானசம்பந்த சுவாமிகள் மன்றத்தினர், திருமயிலை வார வழிபாட்டுக் கழகத்தினர் முதலியோரும் சதாபிடேகம் கொண்ட திரு. பிள்ளையவர்களைப் பாராட்டிப் பேசியும் வாழ்த்திதழ் அளித்தும் போற்றினர். திரு. பிள்ளையவர்கள் ஆசியுரையும் அம்பை சங்கரனூர் நன்றியுரையும் கூறிய பின்னர் கூட்டம் இனிது முடிந்தது.

Reg. M. 2330

13 NOV 1967

உ

சிவமயம்

சித்தாந்தம்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

மலர் 40 | பிலவங்க ஸூ கார்த்திகை 1967 நவம்பர் | இதழ் 11

பழைய மாயூரப் புராணம்

(ஆசிரியர்)

மாயூரம் மயிலாடுதுறை என்று தேவாரங்களில் புகழப் பெற்றது. இங்கு ஐப்பசி மாதம் கடைசி தினத்தன்று நடைபெறுகின்ற துலா காவேரி ஸ்நானம் என்பது தமிழ்நாடு முழுமையும் பிரசித்தமானது. அது 'கடைமுழுக்கு' என்று தமிழில் வழங்கும். உமாதேவியார் மயிலாக இருந்து பூசை செய்தமையால் இது மயிலாடுதுறை ஆயிற்று. இவ்வூருக்கு மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை பாடிய மாயூரப் புராணம் மிகவும் பிரசித்தமாய்த் தெரிந்த நூல்.

பிள்ளையவர்கள் மாயூரத்தில் வசித்து வந்தபோது, அங்கு மாயூரநாதர்கோயிலில் கட்டளைத் தம்பிரானுயிருந்த முத்துக்குமாரத் தம்பிரான் என்பவரும், ஊரிலுள்ள சைவர்களும், இவ்வூருக்கு ஒரு புராணம் பாடும்படி இவரைக் கேட்டுக் கொண்டார்கள். அதன் மேல் இவர் வடமொழி மான்மியத்தை மொழி பெயர்க்கச் செய்து தமிழில் பாடியிருக்கிறார்.

இவர் பாடிய புராணம் 61 படலங்களையுடையது; செய்யுள் தொகை 1894. இந்நூலுள், கடைசி 10 படலங்களில், மாயூரத்திலிருந்த ஒரு சைவ தேசிகர் விரும்பிய வண்ணம், பிள்ளையவர்கள் நித்திய கரும விதிகளைத் தொகுத்துப் பாடிச் சேர்த்தாரென்று ஐயரவர்கள் எழுதியிருக்கின்றார். இப்புராணம் பெரிய நூலாதலால், இதில் புலவர் பெருமான் பல இடங்களில் சுவையுடைய பொருளையும் பாடலையும் பொதிந்து வைத்திருக்கின்றார். அகத்தியர் பூசைப் படலத்தில் இவ்வகைப் பாடல்கள அதிகம் உள்ளன. பல்லாண்டு சில பாடல்களில் உள்ளது. அகத்தியர் தோத்திரம் செய்கின்ற பாடலாகிய ஒரு போகு மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா சிறப்புடையது. அபயாம்பிகையைக் கேசாதி பாதமாக அகத்தியர் வருணித்து அடிதோறும் போற்றி யென்ற முடிவோடு பாடியுள்ள ஏழு பாடல்களும் இன்னும் சிறப்பானவை. மாயூரத்தில் சிறப்பாக உள்ள குமாரக் கடவுள் வணக்கமாக தலை, கண், வாய், செவி, மனம், கை ஆகிய உறுப்புக்களைச் சுட்டிப் பாடுகின்ற பாடல்கள் நல்லன. இந்த நூலை 1869-ஆம் வருடம் பிள்ளையவர்களின் மாணாக்கர் சுப்பராயச் செட்டியார் அச்சிட்டார்.

பிள்ளையவர்கள் மாயூரப் புராணம் பாடுவதற்கு முன் பாடப்பட்ட மற்றொரு 'பழைய மாயூரத்தல புராணம்' தமிழில் உண்டு. இது பற்றித் திருவாவடுதுறை ஆதீனத்தார் வெளியிட்ட மாயூரத்தல வரலாற்றில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்கள். "சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பொன் விளைந்த களத்தூர் ஆதியப்ப நாவலரால் இயற்றப்பட்ட பழைய மாயூரப் புராணம் ஒன்றுண்டு. இப்போதும் அது கிடைப்பதில்லை, அக்காலத்தும் இல்லை".

இப்போது இந்நூல் ஏட்டுப் பிரதிகள் எம்மிடம் இரண்டு கிடைத்துள்ளன. இந்த ஏடுகளைப் பரிசோதிக்கும் போது நூலையும், ஆசிரியரையும் குறித்த எல்லா விவரங்களும் தெரிய வருகின்றன. இவ்வேடுகளில் ஒன்று 439 இதழ்களைக் கொண்டது; மற்றது 328 இதழ்கள்; இரண்டும் பூர்த்தி; முதல் ஏட்டில் நூல் முடிவில் ஐந்து

இதழ்களில் நூலின் சருக்க அட்டவணை எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது ஏட்டின் இறுதியில் "மாயூரத்தல புராணம் சருக்கம் 119க்குத் திருவிருத்தம் 6519, சார்வரி வருஷம், ஐப்பசி மாதம் 30–ஆம் தேதி சோமவார நாள் வாஞ்சியூரிலிருக்கும் மாட பூசை ராமையன் குமாரன் வேங்கடாசலம் புராணம் எழுதி அரங்கேற்றுவித்து, நந்தி சங்கர மத்தியிலே சுவாமி சந்நதியிலேயே திருச்செவிக்குச் சிறப்பித்துப் படித்து முகிந்தது. முற்றும்" என்ற குறிப்பு காணப்படுகிறது.

நூலாசிரியர் தாம் பாடிய காலத்தைப் பாயிரம் 23 ஆம் பாடலில் குறிப்பிட்டு இருக்கிறார்.

"ஒய்விலுரை யுணர்புலவர் உவகையொடு முகமலர
உறுசகாத்தம்
ஆயிரத்தோ டறுநூற்று நாற்பத்தி ரண்டாண்டுக்
கப்பால் இங்ஙன்
மேயவர்டஞ் சாருவரி தனிற்சித்ரை மாமதியில்
விண்ணோர் போற்றும்
நாயகன்வாழ் மாயூரத் தலபுரா ணம்பாடி
நவின்ற தாமால்".

இப்பாடலால் இந்நூல் செய்த காலம் சகாப்தம் 1642 (அதாவது கி.பி. 1720) சித்திரை மாதத்தில் நூலாசிரியர் இப்புராணம் பாடினாரென்றும், இதே வருஷம் ஐப்பசி மாதம் அதாவது ஆறு மாதம் கழித்து எழுதி முடித்திருக்கிறது என்றும் தெரிகிறது. இந்த ஏடு ஆசிரியரே தம் கைப்பட வைத்திருந்து திருத்திய ஏடு என்று யூகிப்பதற்கான குறிப்புகள் ஏட்டினுள் காணப்படுகின்றன. பெரிய நூலாதலாலும் சார்வரி சித்திரையில் பாடி சார்வரி ஐப்பசியில் அரங்கேற்றப் பெற்றதாலும் இவ்வேடே ஆசிரியருடைய கைப்பிரதி என்று கருதலாம். பாயிரம் பாடத் தொடங்கும் போதே நூல் முடியும் வரை காத்திராமல் நூல் செய்த காலத்தைப் பாயிரத்தின் முடிவில் சேர்த்துப் பாடுவது அக்கால வழக்கமாயிருந்திருக்கிறது. நூல் தொடங்கிய உடனேயே சிறப்புப் பாயிரம் பாடுவதும் உண்டு, எனவே, இந்த முறையில் இந்த ஆசிரியர் சார்வரி

சித்திரைப் பௌர்ணமியில் பாயிரம் பாடிய போதுதான் நூலைத் தொடங்கினர் எனக் கருதுவது பொருந்தும். நூலைப் பாடி ஆறுவது மாதம் முடிந்து ஐப்பசி மாதம் முப்பதாம் தேதியன்று அரங்கேற்றி முடித்தார். இவ்வேடுகள் பிழையில்லாது மிகவும் திருத்தமானவை.

இந்நூற் பாயிரப் பாடல்களில் உள்ள நூல் வரலாறும் நூலாசிரியர் அவையடக்கம் முதலியனவும், ஆசிரியர் வரலாற்றை ஓரளவு தெரிவிக்கின்றன. மாயூரத்தல மான்மியங்கள் பல உள்ளன. அவற்றில் காந்தத்தில் 43 சருக்கம், பிரமகைவர்த்தனத்தில் 45 சருக்கம், பிரமாண்ட உபபுராணத்தில் 31 சருக்கம் ஆக மொத்தம் 119 சருக்கங்களை தமிழில் மொழி பெயர்த்து, பொன் விளைந்த களத்தூர் தமிழ்ப் புலவர் ஆதியப்ப நாவலர் என்பவர் இப்புராணமாகப் பாடியிருக்கிறார்.

இங்ஙன் நுவல் வடகலையிற் சருக்க மெல்லாம்
இலகுபசுந் தமிழ்மொழியால் எவர்க்கும் தோன்றப்
பொங்குபுகழ் வாணிபகோத் திரத்தின் மேவும்
பொன்மாறைப் பதிபுரக்கும் போசன் பூத்த
செங்குவளைத் தொடையல் வயித்திய நாதன்சேய்
தீராத வினைதீர்த்தான் செப்பென் றேதச்
சங்கவயற் பொன்விளைந்த களத்தூர் மேய
தமிழரையன் ஆதியப்பன் சாற்றி னானால்

இப்பாடலால் நாம் அறிவது, பொன்மாறைப்பதி என்ற ஊரில் வணிகமரபில் வைத்தியநாதன் புதல்வராய்த் தோன்றிய வினை தீர்த்தான் செட்டியார் என்பவருடைய வேண்டுகோளுக் கிணங்கி, பொன் விளைந்த களத்தூர் புலவர் ஆதியப்ப நாவலர் இந்நூலைப் பாடினாரென்பது. பொன்மாறை என்பது தொண்டை நாட்டில் புலியூர்க் கோட்டத்தைச் சார்ந்ததும் பொன்மாறு என வழங்குவது மான ஒரு சிற்றூர். இப் பொன்மாறை வினைதீர்த்தான் செட்டியாரே இங்குக் கூறிய காலத்திற்கு மூன்று ஆண்டுகள் முன்னதாகவே (கி.பி. 1718) ஒப்பிலாமணி தேசிகர் பாடிய சிவ ரகசியத்தை அரங்கேற்றுவித்தார் என்று தெரிகிறது. சிவரகசியம் சரபோசிராசன் ஆதரவில்

பாடிய போதிலும், இவ்வினை தீர்த்தான், பாகை. புன்னை லனநாதன் ஆகிய இருவர் உதவியால் அரங்கேறியது என்று பாடல் கூறுகிறது.

திருமருவு கும்பகோ ணத்தில் வாழுஞ்
செல்வமிகு பலர்சனங்கள் சிவன்பா லன்பர்
பொருவில்சிவ ரகசிய புராண மாகும்
பொருந்தும்வட மொழிதமிழாற் புனைவா யென்னத்
தருமமிகு தவவணையாஞ் சைவன் றியாகர்
சன்னிதியில் வரிசைபெறுந் தலைமை பூண்டோ
னிருமைநல்கா ரூர்ப்பிறந்தோ னூரன்சேய்
இசைகொளொப்பி லாமணிதா னிசைத்த வாறே

மன்னர்புகழ் சரபோசி மகாராச ராசன்
மா நிலங்காத் திடுநாளிற் றஞ்சைமா நகரிற்
உன்னுமே விளம்பியுற்ற மகரமதி யைந்திற்
சோதிசிவ ரகசியமொப் பிலாமணிசொற் றமிழை
யிந்நிலத்தி னரங்கேறச் செய்தனர்பொன் மாறை
யெழில்சேருந் தீராத வினைதீர்த்தான் பாகைப்
புன்னைவன நாதனிவர் சைவநெறி வளர்க்கும்
பூபால ரவனியெங்கும் புகழினிதோங் கிடவே

இவ்வாதியப்ப நாவலர் பாடிய மாயூரப்புராணமானது நான்கு பாகங்களாக உள்ளது. அதிலுள்ள பகுதிகளும் பாடல் தொகையும் பின்வருவனவாகும்:—

பகுதி	சருக்கம்	பாடல்
1. பிரமாண்ட புராணம்	31	2306
2. பிரம கைவர்த்தம்—காவேரி மான்மியம்	45	1837
3. மாயூர மான்மியம்—சதருத்திர சங்கிதை	18	323
4. இடபதீர்த்த மகிமை	25	2053
	119	6519

இவ்வளவு விரிவான தலபுராணம் தமிழில் வேறில்லை. கந்த புராணமொன்றே புராண வகையில் பத்தாயிரம் பாடல்களுக்கு மேல் உள்ளது. காவியங்களில் கம்ப ராமாயணமும் நல்லாப்பிள்ளை விரித்துச் செய்த பாரதமும் பத்தாயிரம் பாடலுக்கு மேல் கொண்டவை. வேறு புராணம் நாலாயிரத்தைக் கடந்தது அருமை. (திருநெல்வேலிப் புராணமொன்றே மிகவும் பெரியது.) பெரிய புராணச் செய்யுள் தொகை 4286. சிவஞான சுவாமியும் கச்சியப்ப முனிவரும் பாடிய விரிந்த புராணமாகிய காஞ்சிப் புராணம் இரண்டு காண்டமும் சேர்ந்து 4825 பாடல்கள் உடையன. ஆனால் ஆதியப்ப நாவலருமுடைய மாயூரப் புராணமோ 6519 பாடல்கள் உடையது. நூல் நல்ல நடையினை உடையது.

இவ்வாசிரியருடைய குரு காஞ்சிபுரத்தில் வாழ்ந்த சிவாசாரியராகிய சாம்பசிவ குரு என்பவர்.

தாவிலறம் எண்ணான்கும் தனிவளர்க்கும் அன்னை தனத்
தழும்பு காட்டும்
தேவிலகும் திருக்காஞ்சி புரத்துறையும் சிவமறையோர்
திலகன் மூவர்
பாவிலகுஞ் செவிப்பரமன் அஞ்செழுத்தான் மும்மலமும்
பறிக்கும் எந்தை
பூவுலகிற் சதுமறைதேர் சாம்பசிவ குருமலர்த்தாள்
புகன்று வாழ்வாம்.

இந்நூலாசிரியர் மிகப் பலவான தலங்களுக்குத் தல புராணம் பாடியிருக்கிறார். மாயூரப் புராணம் பாடுவதற்கு முன் திருக்களர், கொள்ளம்பூதூர், பூளைவனம் (இரும்பூளை), பரிதி வனம் (பரிதி நியமம் அல்லது சூரியனார் கோவில் ஆகலாம்), தஞ்சை, கண்ணார் கோயில், வைகல் ஆகிய ஊர்த்தல புராணங்கள் தாம் பாடியுள்ளதாகக் கூறுகிறார். இவற்றுள் திருக்களர்ப் புராணம் 19.2ல் அச்சானதாகத் தெரிகிறது. மற்ற புராணம் எதுவும் இப்போது கிடைப்பதாகத் தெரியவில்லை.

பொன்னுருஞ் திருக்களர்நம் கொள்ளம் பூதூர்
பூளைவனம் பரிதிவனம் போற்றும் தஞ்சை
தென்னுருங் கொடிவீதிக் கண்ணூர் கோயில்
சிறந்த வைகற் பதியிவைக்குஞ் சிவபுராணம்
பன்னுளும் தனியோங்கும் தமிழாற் செய்தேன்
பகர்சூதன் உரைத்தபடி பரன்பால் வைகும்
மின்னுரும் மாயூரப் பதிக்கு மீண்டும்
விளம்புகேன் வழுவுறினும் விரும்பு வாரே.

இதுகாறும் நாம் கூறியவற்றுல், மாயூரப் புராணம் மீனுட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடியதற்குச் சுமார் 150 ஆண்டுகள் முன்னதாக பொன் விளைந்த களத்தூர் ஆதியப்ப நாவலர் என்பவர் 6519 பாடல்கள் கொண்ட மிக்க விரிவான மாயூரப் புராணத்தை கி.பி. 1720 இல் மூன்று வட மொழிப் புராணங்களை மொழி பெயர்த்துச் செய்தாரென்றும், இவர் இப் புராணம் பாடுமுன் தாமே ஏழு தலங்களுக்குப் புராணம் பாடியிருந்தாரென்றும் அறிகின்ருேம்.

இப்பழைய மாயூரப் புராணம் இங்கு விவரித்தபடி நான்கு பகுதிகளையுடையது, இந்நான்கில் இரண்டாவது பிரமகைவர்த்த புராணம் காவேரி மான்மியம் என்பது. இப்பகுதி மட்டும் தனியே தமிழில் மற்றொருவர் பாடி அச்சிடப்பட்டுள்ளது. திருமறைக்காடு திருச்சிற்றம்பல முனிவர் என்பவர் இப்பகுதியை வடமொழியிலிருந்து 36 அத்தியாயம், 1474 செய்யுளாக மொழிபெயர்த்துப் பாடினுர். இவர் ஞானமூர்த்தி சந்தானத்தில் வந்தவர். காலம் இப்போது தெரியவில்லை; 18 ஆம் நூற்றுண்டாகலாம். இந்நூலை வேதாரண்யம் "உபய கவித்துவ பண்டிதர் தையல் பாகதேசிகர் அனுமதியால் அவர்கள் மாணுக்கர் நாகப்பட்டினம் சமீபம் வடக்குப் பொய்யூரென்று வழங்குகின்ற பொய்கை நல்லூர் சுப்பைய தேசிகர் பரிசோதித்துச் சென்னைப்பட்டனத்திலிருக்கும் மகாாா ஸ்ரீ நாகப்பட்டினம் சுப்பராயச் செட்டியாரவர்கள் உதவியால் தக்கோலம் நரசிம்மலு நாயுடு அவர்களது விவேக சந்திரோதய அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. பிரஜோற்பத்தி வருஷம் புரட்டாசி மாதம் (1—8—71) என்பது இதன் முகப்புப் பக்கம்.

[குறிப்பு:—திருக்களர்ப்புராணம், "களந்தை ஆதியப்பனூர் இயற்றியது; இது களப்பாள் ஸ்ரீமான் கு. ஸ்ரீனிவாச முதலியாரவர்கள் வேண்டுகோளின்படி குடந்தை டவுன் ஹைஸ்கூல் முதல் தமிழ்ப் பண்டிதராகிய பின்னத்தூர் அ. நாராயணசாமி ஐயரால் எட்டுப் பிரதிகளைக் கொண்டு ஒருவாறு பரிசோதித்து, திருக்களர் மு. சாமிநாத உபாத்தியாயர் முயற்சியால் கும்பகோணம் ஸ்ரீ வித்தியா முத்ராக்ஷரசாலையில் அச்சிடப்பட்டது" என்ற தலைப்பக்கத்தோடு 1902ல் அச்சாகியிருக்கிறது. மிகச் சிறந்த பதிப்பு. இதனுள் பதிப்பாசிரியர் 4 திருக்களர் செப்பேட்டுச் சாசனங்களையும், 12 கல்வெட்டுக்களையும் முழுமையாக அச்சிட்டிருக்கிறார். பிற்காலத்தில் கோயில் திருப்பணியில் கற்களைப் பிரித்துவிட்டபடியால், இக் கல்வெட்டுக்கள் இன்று காண்பதற்கில்லை. இவர் சிலாசாசனச் சொற்களுக்கு அரும் பொருளும் எழுதியிருக்கிறார். இப்புராணத்தில் சருக்கம் 7, பாடல்கள் 411. ஆசிரியர் இந்நூலுள் அழகிய திருச்சிற்றம்பல தேசிகரைக் குறிப்பிடுவதால், அவர் காலம் கி. பி. 1700—25 என்ற செய்தியும் இதனால் வலியுறுத்தப்பெறுகிறது.]

"புறவார் பனங் காட்டூர்."

(வை. பாலசுப்பிரமணியம், பனையபுரம்)

நடு நாட்டின் கண் விளங்கும் சிவத்தலங்கள் இருபத்திரண்டினுள் இதுவும் ஒன்று.

"வாளையுங் கயலும் மிளிர் பொய்கை வார்புனற் கரையருகெலாம் வயற்
பாளையொன் கமுகம் புறவார் பனங்காட்டூர்ப்
பூளையுந் நறுங் கொன்றையும் மதமத்தமும் புனைவாய் கழலிணைத்
தாளையே பரவுந் தவத்தார்க் கருளாயே"

என்று திருஞான சம்பந்தமூர்த்தி [2ம் திருமுறை] நாயனாரால் பாடப்பெற்ற தலம்.

அமைப்பிடம்: தென் ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரம் வட்டம், முண்டியம் பாக்கம் புகை வண்டி நிலையத்திற்கு வடகிழக்கே சுமார் 2 கல் தொலைவில் உள்ளது. சென்னை-விக்கிரவாண்டி நெய்வேலி நெடுஞ்சாலையில் சென்னையிலிருந்து 95 வது கல்லில் இவ்வூர் அமைந்துள்ளது.

ஊர்: தற்போது பனையபுரம் என்று வழங்கப்படுகிறது. பனங்காட்டூரின் மறுபெயர் பனையபுரம் என்பதாகும். சுமாரான குடியிருப்பு உடையது.

கோயில் அமைப்பு: பரந்தகோயில். கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. ஈசுவரர், அம்பிகை சந்நிதிகள் சுற்றுப் பிரகாரத்துடன் கிழக்கு முக அமைப்புடன் விளங்குகிறது. புறப்பிரகாரத்தில் விநாயகர், சுப்பிரமணியர், நவக்கோள்கள், சந்நிதிகள் அமைந்துள்ளன. கோயில் பழுதடைந்திருந்து, தற்போது நிருவாகத்தினரின் சீரிய முயற்சியால் திருப்பணி வேலைகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் முடிவு பெற்று குடமுழுக்கு விழா நடைபெறும்.

இறைவன்: பனங்காட்டீசுவரர். இறைவி: புறவம்மை. கோயின் மரம்: பனை.

வரலாறு: புருவிற்கு அடைக்கலம் தந்த சிபி வேந்தன், அதன் பொருட்டுத் தன் தசையை அரிந்து புருவின் சம எடைக்காகத் தராசில் வைத்தும் எடை சரியாகாமையால் தன் கண்ணைப் பறிக்க முயன்றார் என்றும், கண் பறிக்கும் சமயம் இறைவன் காட்சி தந்து அருள் செய்தார் என்றும் வரலாறு கூறுகிறது. இதன் பொருட்டே இறைவனுக்கு (நேத்திரோத்தாரக ஈசுவரர்) கண் பறித்தருளிய கடவுள் என்று பெயர் வழங்குகிறது.

இறைவி புறவம்மையைச் சத்தியம் நிலைபெற அருளும் சத்தியாம்பிகையாக வழிபடுகின்றனர் மக்கள்.

கோயில் முன் "பொய்ச்சத்தியம்" செய்பவர் வாழ்வு பொய்த்து வருவதை இன்றும் கண்டு அம்பிகையின் அருளை எண்ணி வியவாதார் இலர்.

சிறப்பம்சங்கள்: பகலவனை வழிபட்ட பின்பே சிவ பூசை தொடங்குவது இங்குமரபு.

பகலவனின் கதிர்கள் மூலமூர்த்தியின் மேல் படியும் படி தமிழ் நாட்டில் சில சிவ ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவ்வமைப்புக்கள் உடையனவற்றுள் இதுவும் ஒன்று. தமிழர்களின் ஆண்டு ஆரம்பதினமாகிய சித்திரை முதல் நாள் தொடங்கி 7 ஆம் நாள் வரை இவ்வாறு பகலவன் கதிர்கள் அதிகாலையில் மூலமூர்த்தியாம் பனங்காட்டீசுவரர் மேல் தோயும்படியான சிறப்பு இவ்வாலயத்திற்கே உரியது. ஆண்டு தொடங்குமுன் பகலவன் பனங்காட்டீசுவரரை வழிபட்ட பின்னே தன் கருமத்தைத் தொடங்குகின்றான் என்பது இவ்வாலயத்திற்கு ஒரு தனிச் சிறப்பன்றோ!

விழா: மாத மொரு விழா உண்டு. குடமுழுக்கு விழா நடை பெறாமையால் தற்போது அதுவும் நடைபெற வில்லை.

திருவருட் பயன்

டாக்டர் தா. ஐ. ஏசுதாஸ்
எம். ஏ., எம். லிட்., எம். எட்., பி. எச். டி.,
(தத்துவத்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.)

"நற்குஞ் சரக்கன்று நண்ணிற் —கலைஞானம்
கற்குஞ் சரக்கன்று காண்"

இது திருவருட் பயனின் காப்புச் செய்யுள். இதன் பொருள் யானைமுகக் கடவுளை வேண்டினால் கலைஞானம் அத்தெய்வத்தின் அருளால் தானே வந்து எய்தும் என்பது. "கடவுளுக்குப் பயப்படுவதே ஞானத்தின் ஆரம்பம்" என்று விவிலியம் கூறுவது இங்கு உன்னத்தக்கது; "ஜெபித்து உழை" என்ற லத்தீன் வாசகத்தை ஒப்பிட்டுப்பார்க்க இன்பம் விளைப்பது.

சைவ சித்தாந்தத்தின் பதினான்கு சாத்திரங்களில் எட்டு "சித்தாந்த அட்டகம்" எனப் பெயர் பெறும். இவை எட்டும் கொற்றவன்குடி உமாபதி சிவாச்சாரியார் செய்தவை. அவற்றுள் ஒன்றே திருவருட்பயன். இதில் பத்து அதிகாரங்கள் உள்ளன. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்து குறட்பாக்கள் இருக்கின்றன.

திருவருட் பயனுக்குப் பண்டைய உரை நிரம்ப அழகிய தேசிகர் செய்தது. அதன் பிறகு இலங்கை சிவபாதசுந்தரம் ஒரு நவீன உரை செய்துள்ளார். சமீபகாலத்தில் அண்ணாமலை நகர் க. வெள்ளைவாரணர் திருமுறைகளையும், திருக்குறளையும் இந்நூலோடு ஒப்பிட்டு ஒரு விளக்கவுரை செய்துள்ளார்.

போப்பையரும், மறைந்த மாபெரும் பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளையும் திருவருட்பயனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளனர்.

திருவருட்பயனில் பதின்மூன்று திருக்குறட்பாக்களின் சொற்களும், கருத்துக்களும் விரவி வந்துள்ளன; முப்பத்து நான்கு எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன. இக்கட்டுரையின் நோக்கம் அவ் எடுத்துக்காட்டுகளை மட்டும் தொகுத்துக் கூறுவதாம்.

> "அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்
> நிகரிலிறை நிற்கும் நிறைந்து"

என்பது திருவருட்பயனின் முதல் அதிகாரத்தின் முதல் குறள். இது திருக்குறளின் முதல் செய்யுளாகிய—

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே யுலகு"

என்பதனோடு வைத்து எண்ணத்தக்கது. திருவருட் பயனின் முதல் அதிகாரம் பதிமுது நிலையைக் கூறுகிறது. அதில் முழுமுதற் கடவுள் "எரியுநீர்" என்று (பாட்டு 8) குறிப்பிடப்படுகிறார். சுடு நீரில் வெம்மை கலந்தும் பிரிந்தும் இருப்பதுபோல் கடவுள் உலகில் கலந்தும் பிரிந்தும் இருப்பது சுட்டப்படுகிறது; 'பவம் தீர்க்கும் மருந்து" என்பது (பா. 10) மற்றொரு பெயர். இதன் பொருளை விளக்கத் தேவையில்லை. இத்தொடரினால் சைவ சமயத்தில், இந்து மதத்தில், பாவத்தைப்பற்றியே பேச்சில்லை என்ற கூறு மறுக்கப்படுகிறது.

திருவருட் பயனின் இரண்டாவது அதிகாரம் உயிரவை நிலை. ஆன்மாக்கள் எண்ணித்தொலையா, அவற்றிற்குப் பலவேறு பிறப்புகள் உண்டு எனவும் இரு தொடர்களால் விளக்கப்படுகின்றன. அவையாவன: "பிறந்த நாள் போலும் துறந்தோர்," பிறக்கும் நாள் போலும் துறப்போர்" (பா. 1). ஆன்மாவிற்குக் கூகையைப்போல் கண் தெரியாது என்ற எடுத்துக்காட்டால் சுருங்கச் சொல்லி விளக்கப்படுகிறது. 'ஊமன் கண்" என்பது நூலின் வாசகம் (பா. 9)

இனி மூன்றாவது அதிகாரம் இருண்மலநிலை; அதாவது ஆணவ மலத்தை விளக்குவது. ஆணவம் எல்லா உயிர்களையும் பற்றியுள்ளது. ஆனால் தன்னை ஆணவம் பீடித்துள்ளதை உயிர் அறியாது. இஃது "பலரைப் புணர்ந்தும் கணவற்குத் தோன்றா கற்பு" போன்றது என்று எள்ளி நகைக்கப்படுகிறது (பா. 5). மாயாமலம் கேவல நிலையை ஒரு சிறிது போக்கக்கடும் இருளில் சிறு ஒளி தருவது போன்றது என்பதனை "விளக்கனைய மாயை" என்ற திருவருட் பயனின் தொடர் சுட்டிக் காட்டுகிறது (பா. 10).

நான்காவது அதிகாரம் அருளது நிலை. அருளை "அருக்கன் என நிற்கும் அருள்" என சூரியனோடு ஒப்பிட்டுக் காட்டப்படுகிறது. சூரியன் படைத்தல், காத்தல்,

மறைத்தல், அழித்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களையும் செய்வதுபோல் திருவருளும் இத்தகைத்து என இதனால் பெறப்படுகிறது. (பா. 2). இதை அறிந்து திருவருளைப் பருகாது ஆன்மா "பால் ஆழிமீன்" போன்று சிற்றின்பமாகிய அழுக்கையே உண்ணுகிறது (பா. 4). மேலும் "தரையை அறியாது தாமே திரிவோர்" போன்று அருளை அறியாது இருக்கும் உயிர் என்று கூறப்படுகிறது. (பா. 6). ஆன்மாக்கள் மூன்று வகையாக சித்தாந்தத்தில் பேசப்படுவது. அவற்றை "மலகெடுத்தோர், மண்கெடுத்தோர், வான்கெடுத்தோர் என்று திருவருட் பயன் வகுக்கின்றது (பா. 7). கெடுத்தோர் என்பதற்குப் பயனை அறியாதவர் என்பது பொருள். "வெள்ளத்துள் நாவற்றி கள்ளத்து அலைவர்" என்பது மற்றொரு பாட்டுத் தொடர் (பா. 8) இங்கு வெள்ளம் என்பது திருவருளை. நாவற்றியவர்கள் அருளைக்குடிக்க இயலாத ஆன்மாக்கள். மாணிக்கவாசகர் திருவாசகத்தில் "விக்கினேன்"–அருளை உண்ண முடியாது என்று கூறுவது இங்கு சிந்திக்கத்தக்கது. திருவருட் பயனின் மற்றொரு செய்யுள் "பாற்கலன் மேல் பூசை கரப்பருந்த நாடும்" (பா. 9) என்பது. அதாவது பால்பாத்திரத்தின் மேல் உட்கார்ந்திருக்கும் பூனை எலியைக் கண்டதும் பாலைவிட்டு எலியைத் தின்ன ஓடுவது போல் திருவருளாகிய சுவைமிக்க பாலைவிட்டு ஆன்மா சிற்றின்பமாகிய எலியை நாடிச் செல்லுகிறது என விளக்குகிறது.

ஐந்தாவது அதிகாரம் அருளது நிலை. இது அருளின் வடிவான குரவனைப்பற்றிக் கூறுவது. சற்குரு அகத்துறு நோய் தீர்ப்பவர் (பா. 2); பார்வை மிருகம் போன்றவர்; இதனை நமது கருமேனி கழிய திருமேனி கொண்டவர் என்று சித்தியார் கூறும் (பா. 5); விடநகிலம், அதாவது கீரிப்பிள்ளை போன்றவர் (பா. 7); அழுக்கைச் சுட்டெரிக்கும் சூரியக்காந்தக்கல் போன்று அறியாமையைப் பொசுக்குபவர் (பா. 10)

உண்மைப்பொருளை அறியும் முறையைக் கூறுவது, அடுத்த அதிகாரமாகிய அறியும் நெறி (அதி. 6). படிகம் வேறு அது காட்டும் பொருள் வேறு அல்ல. அவை அத்து

விதமாக நிற்கின்றன (பா. 5); படிகம் போன்றே கண்ணும் அது பார்க்கும் பொருளும் இரண்டறக் கலந்துள்ளன. அவை போன்று ஆன்மா தான் வேறு ஆண்டவன் செயல்வேறு அல்ல என்று உணரவேண்டும் (பா. 7).

ஏழாம் அதிகாரத்தில் ஆன்ம சுத்தியாகிய உயிர் விளக்கம் கூறப்படுகிறது. ஆன்மா பளிங்கு போன்றது. சூரியன் உச்சியில் வந்தால் சூரியனே பளிங்கில் தெரியும். மனிதனின் நிழல் சூரியன் உச்சியில் வந்தால் அவனுக்குள்ளேயே ஒடுங்கும். அப்பொழுது நிழலை ஒடுங்கச் செய்ய உபசாரம் பண்ணவேண்டியதில்லை. அதுபோல் இறை அருளால் இருவினை ஒப்புகிட்டினால் ஆன்மா திருவருட்குள் அடங்கிப்போகும் (பா. 1). ஆணவத்தால் வருந்தும் ஆன்மா "பித்தநாவு பால் சுவை அறியாது" போலாகும். பித்தமாகிய ஆணவம் அகன்றால்தான் திருவருட்பால் சுவையை உயிரறியும் (பா. 2). மேலும், நான் பிரமம் "என்ற யுக்திவாதம் ஒவ்வாது. அது வஞ்சகமுடன் ஒருவன் வைத்துச் சென்ற நிதிகவரல் போன்றது. இரண்டிலும் ஏமாற்றம் இருக்கிறது (பா. 6), சிவப்பிரகாசம் "ஒளிதரும் ஸ்தம்பம்" (பா. 7); அது கிடைக்கப்பெற்றவர் உற்கை தரும் பொற்கை உடையவர்" (பா. 8), அதாவது உள்ளங்கையில் விளக்காகிய ஒளியுள்ளவர். இந்த சிவப்பிரகாசத்தைக் கட்டாயப்படுத்திப் பெறமுடியாது, அப்படிச் செய்வது "தாமே தருபவரைக் கட்டாயப் படுத்தல் போல்" இருக்கும் (பா. 10).

எட்டாம் அதிகாரமாகிய இன்புறுநிலை ஆன்ம இலாபத்தைக் கூறுவது. சிவப்பிரகாசத்தால் இறைவனாகிய தலைவனோடு ஆன்மாவாகிய தலைவி கூடிவாழ்வது போன்றது. இருபெண்பாலர் கூடி இன்பம் அனுபவிக்க முடியாது என்பதனை "இருவர் மடந்தையருக் கென்பயன் ?" என்று திருவருட் பயன் வினவுகின்றது (பா. 2). இறைவன் ஆன்மக்கலப்பு இறைவனின் தாளை உயிரின் தலை ஒன்றியிருத்தலாகும். இதுவே "தாடலை" என்று குறிப்பிடப்படுகின்றது. (தாடலை = தாள் + தலை) (பா. 4) கேட்டல் (சிரவணம்), சிந்தித்தல் (மனனம்), தெளிதல் (நிதித்தியாசனம்) ஆகிய ஞானமார்க்கப்படிகளில் நமது

முயற்சிகள் பயன்படும். ஆனால் நிட்டை கூடலில் (சமாதி) நம் சுயமுயற்சி பயன் தராது. இறைவனே குருவாக இருந்து கைகொடுக்கவேண்டும். நிட்டைகூடல் "பேய் ஒன்றும் தன்மை" போன்றது, அதாவது பேய் போல் திடீரென வரும், அது நமது கையிலில்லை (பா. 7) பேரின்பத்தை நுகருபவர் தாம் அறியாமலே சிற்றின்பத்தை விட்டுவிடுவர். இதனை "கண்படுவோர் (அதாவது தூங்குபவர்) கைப்பொருள்" என்று திருவருட்பயன் உவமிக்கின்றது (பா. 8). இதனை "தூங்குபவன் கை பாக்கு" என்று கூறுவது உண்டு.

ஒன்பதாவது அதிகாரம் ஐந்தெழுத்தருள் நிலை. பஞ்சாட்சரம் ஓதுவது அருளின் ஒருவகை. இவ்வதிகாரத்தான் ஓங்காரமாகிய "ஓம்" என்பதும் "சிவாயநம" என்பதை ஐந்தெழுத்தும் ஒரே பொருளுடையன என்று கூறப்பட்டது. மற்ற உவமைகள் இல்லை.

பத்தாவதாகிய கடைசி அதிகாரம் சமுசாரசாகரத்தைக் கடந்த அணைந்தோர் தன்மையைக் கூறுகிறது. அவர்கள் ஆமைக்கு ஒப்பிடப்படுகின்றனர். ஆமை அபாயத்தைக் கண்டால் தனது ஐந்து உறுப்புக்களையும் சுருக்கிக்கொள்ளும். இவ்வாறே பஞ்சேந்திரியங்களை அடக்கியிருப்பர் அணைந்தோர். ஆனால் ஆமை மறுபடியும் தன் அவயவங்களை வெளிக்காட்டும். ஜீவன் முக்தர் அவ்வாறு இரார்.

தொல்காப்பியரும் சமயாச்சாரியர்களும்

சித்தாந்தச் செல்வர்: அ. தா. ப. திருஞான சம்பந்தன்

தொல்காப்பியர் தமிழ் மொழிக்கு இலக்கணம் தோற்றுவித்தவர். இவர் கடவுளுக்கு இலக்கணம் கற்பிக்கவோ, அன்றி, அக்கடவுளர்களுககு உரிய, வழிபாட்டு முறைகளுக்காக அரிய பாடல்களையோ பாடியவரல்லர். இலக்கண வாசிரியரான காப்பியர், எழுத்துக்கும், சொல்லுக்கும், இலக்

கண மமைத்ததோ டமையாமல், பொருளுக்கும், யாப்புக் கும், தனிப்பெரு விலக்கண மமைத்தவொரு சான்றோர். தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரும் பெறுதற்கரிய அகத்தியம் போன்ற விலக்கண நூல்கள் தமிழ் மொழிக் கென கண்டிருந்த போழ்திலும், இவர்காலத்திற்றான் பொருளிலக்கணம் தோற்றுவிக்கப் பெற்றுத் தமிழ்மொழி சிறப்பினும், சிறப்பெய்தும் தகைமையதாயிற்று. எழுத்தும், சொல்லும், மொழிக்குரிய விலக்கணமாகவும், பொருளிலக் கணம் வாழ்வியலுக்குரிய விலக்கணமுமாயிற்று. இதன் கண்ணே, தொல்காப்பியர், அகத்திணையியலையும், புறத்திணை யியலையும், அவற்றைச் சார்ந்து பிறவியல்களையும், தோற்று வித்துள்ளார். இத் தமிழ்ப்பெரும் முனிவர் இலக்கணம் பித்தற்றுத் தோற்றுவிக்க மறந்திருந்தால் சங்கஞ் சார்ந்து சுஷான்றிய செழுந்தமிழ் இலக்கியங்களில், "அகத்துறை "சார்ந்த நுணுக்கங்கள்" சீருறப் படிப்படியாக வளர்ந்தி ருக்க மாட்டா! இத்தகைய பொருளிலக்கணந்தான், வாழ்க் கைக்குரிய தலைவன்—தலைவி, இவர்களினிலக்கணங்களைப் பேணி வளர்த்துக் காட்டுகிறது. இத்தகையவொரு பேரி லக்கண நூல் தோன்றியிருந்த போதிலும், அகப்பொருள் புரியவில்லையே யென்று கவன்றகாலை, தமிழ் மக்கட்கு, இறையனாரும் "அகப்பொருளிலக்கணம்" தோற்றியளித் தாரென்பதை அந்நூலின் மூலம் நன்கு உணர்கின்றோம். தொல்காப்பியர் யாத்த பொருளிலக்கணம் புரியாதிருந்துழி, இறையனா ரிலக்கணம் தோன்றவேண்டி யிருந்ததுபோலும். உரையாசிரியர்கள் போக்கின்றித் தொல்காப்பியர் பொரு ளிலக்கணம், பொருட் புலப்பாடு தோன்றும விருந்திருக்க வேண்டுமென்று தோன்றுகின்றது. அதனாற்றான் போலும், இறையனா ரகப்பொருள் தோன்றியிருக்க வேண்டும் என்று கொள்ள வேண்டி யுளது. மேற்கூறிய விரு வகைப் பொருள் நூல்களினும், கூறப்படும் கருத்துக்கள் பெரும்பாலும் வேறு பாடின்றிச் செல்கின்றன.

இனித் தொல்காப்பியர், 'அகத்துறை யின்பம்' பற்றி யறிய வேண்டியவர்களா யுள்ளோம். இவ்வகத்துறையின்ப மிரு பகுப்பா யமைவதாகும். (1) வாழ்வியலுக்குரிய

முறையிலமைவது. (2) வழிபாட்டியலுக்குரிய முறையிலமை வது. முற்கூறப் பெற்றது காமந் துய்த்தற்கும் பிற்கூறப் பெற்றது கடவுள் வழிபாட்டி லருட்டுய்ப்பதற்கும் உரிய வையாகும். இவ்விரண்டிற்குப், ஒற்றுமை மிகுதி பெற்று விளங்குந் தன்மையுளதனால், அவற்றை யிருவேறாகப் பிரித் துக் காண்ட லெவ்வாற்றானும் பொருந்தாதனவாகும். காமமும்=வழிபாடும், ஒன்று கலந்தாற்போல், அகத்தே முகிழ்த்து மணம் வீசும் நிலையுடையவை. காமம் செழித் தோங்கினல்லால், ஆண்டு வழிபாடும் அரும்புவதின் றாம். நல்ல வழிபாட்டிற்கு மூல காரணமாக விளங் குவது, நற்காமம் போற்றலேயாகும். இதைத்தான் சைவ சித்தாந்தம் சிறக்கப் போற்றுகின்ற தென்பதை "பெண்ணினல்லாளொடும் பெருந்தகை யிருந்ததே" என்ற தெளிந்த வுண்மையாற் காணலாம். அங்ஙனமே, "உண் ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்" என்ற தீந் தமிழ்த் தேவார வரியானும் தெள்ளிதி னுணரலாம். தலை வன், தலைமகட் கோலத்திலேயே வென்றும், எம்பெருமா னாரும், எம் பெருமாட்டியுந் திகழ்ந்து நல்லருள் பாலித்து விளங்குகின்றன ரென்பது சமயாச்சாரியர்கள், சந்தாநாச் சாரியர்கள், அடியவர்கள் முதலானோர் கருத்தாகும். அத னாற்றான், கடவுட் காட்சி யின்பத்திற்குப், இறைவனை மானிட வுருவிற் கண்டு, நன்மை கண்டு, வுண்மை யாய்ந்து சான்றோர் பேறு பெற்றனர். வாழ்க்கையி னகத்துறை நுணுக்கங்களைத்தான், சமயாச்சாரியர்களும், கடவுட் பேற் றின்பத்திலு முவமித்துப் பெருமித மெய்திப் பேருளா நந்தம் எய்தின ரென்பது கண்கூடு.

தொல்காப்பியர், தலைவியின் இயல்பை யுணர்த்திச் செல்லும் நிலையை யீண்டுக் கண்டுணர்தல் நன்றாம். தலைவ னது வேட்கையைக் கிழவன் முன்பு சொல்லுதல் நினைக்குங் காலத்துக் கிழத்திக்கு இல்லை. அங்ஙனம், சொல்லாத விடத்துப் புதுக்கலத்தின் கட் பெய்த நீர்போலப் புறம் பொசிந்து காட்டும் உணர்வினையு முடைத்து, அவ்வேட்கை

யென்றவாறு. எனவே, குறிப்பின் உணரா நிற்கும் என்ற வாறு. தலைவன் மாட்டும் கூற்றினாலும், நிகழப்படும் என்று கொள்ளப்படும். —இளம்பூரணவடிகள்.

"தன்னுறு வேட்கை கிழவன் முற்கிளத்த
லெண்ணுங் காலைக் கிழத்திக் கில்லை,
பிறநீர் மாக்களி னறிய வாயிடைப்
பெய்ந்நீர் போலு முணர்விற் றென்ப."

—தொல்–பொருள்–களவு–114.

தலைவி, தலைவனைக் கண்ணுறுங் காலத்து, இயற்கை வயமாகவே, நாணமும், உடற் கோணலும், எண்ண நெகிழ்ச்சியும், வாய்குழறலும் தோன்றுதலியல்பு. பெண் தன்மை மெத்த கரையுந் தன்மையததனால், தொல்காப்பியர், பெண்ணியல்பைப், புதிய தொரு சூளையிலிடா மட்கலத்தில் நீரூற்றி வைத்ததைப் புரையும் (தலைவியின்) வேட்கையென வுணர்த்துகின்றார். ஆண்டவனை வழுத்த வந்த பாடலாசிரியர்கள், தங்களை இலக்கியத் தலைவிகளாகவே யாக்கிப் பாடியுள்ளனர். சமயாச்சாரியர்கள் உள்ளங் கனிந்த வன்பால், எம்பெருமானைத் தலைவனாகவும், தங்களைத் தலைவியாகக் கொண்டும், அருட் பேற்றைப் பெற முனைந்தனரென்பது பின்வருமா றுணர்தல் சாலும். மனம் நெக்குருக நின்று, மன்பதைக் கோரணி விளக்காய்த் திகழ்ந்தவர்களே, மன்னு புகழேத்தும், மாண்புவளரடியார்கள்.

இலக்கியத்திற் றோன்றும் தலைவி தனக்குரிய வியல்பை யுணர்த்த வருத வியற்கை. தலைவனைப் பற்றி வாராயும் நிலையையும், அவனிடம் உரையாடலையும், நாணம் நீங்கப் பெற்ற தலைவி மெல்ல, மெல்ல, செயலுருவிற் கொள்வாளென்பதையும் தொல்காப்பிய முணர்த்துகின்றது. தன்னுடைய நயப்பாட்டிற்காகத், தலைவி செய்யு முபாயங்கள் அளவிலடங்கா! இக்கருத்துக்கள் பொதிந்துள்ளமையைப் பின்வரும் சூத்திரத்தா லுணர்வாம்,

"பன்னூறு வகையினும் தன்வயின் வரூஉம்,
நன்னய மருங்கி னுட்டம் வேண்ட லிற்
துணை சுட்டுக் கிளவி கிழவிய தாகும்,
துணையோர் கருமமாத லான"

—தொல்-பொருள்-களவு-121

"தன்னிடத்து வரும் நல்ல நயப்பாட்டுப் பக்கத்தினை யாராய்தல் தலைவன் மாட்டும் வேண்டுமாதலால், துணையைச் சுட்டிக் கூறலுறும் சொல் தலைமகளதாகும்; தான் கூறும் கருமம் துணையோராற் செய்யப்படும் கருமமாதலான் என்றவாறு. எனவே, தலைமகள் களவுக் காலத்துப் பாங்கற் குற்ற துரைத்த பின்பு பாங்கனைச் சுட்டி யாது செய்வோமெனக் கூறப்பெறு மென்றவாறு.

—இளம்பூரண வடிகள்.

(1) இனி, தொல்காப்பியரின் அகத்துறை யின்பத்தின் வழி நடந்து; திருநாவுக்கரசர் போற்றும் வழிபாட்டுத் துறையின்பம் எவ்வாற்று னமைகின்ற தென்பதை யீண்டுணர்வாம். திருநாவுக்கரசர், சொல்லில் நலங் கெழுமத் திருவாரூர்த் தேவாரம் அருளுகின்றார். அதுகாலை, அப்பர் தன்னையே யொரு தலைவி யெனக் கொண்டு, அகப்பொருட்டுறையி லாழ்ந்து, அருட்டுறை யின்பத்திற்கு வழிகோலுகின்றார் என்பதைப் பின்வரும் தேவாரத்தால் நன்குணரலாம்.

அருட்டுறையின்பப், அகத்துறையின்பத்தையும் விஞ்சிச் செல்வதை யிவண் காணலாம். தலைவியானவள், திருவாரூரில், தலைவனைக் காணும் பேறு பெறுகின்றாள். அங்ஙனம் காணு மாற்றால், அவள் தன்னிலையினின்று மிழிந்து செல்கின்றாள்; எனினும், பேரருட்டுறையினுக்குப் பேண் தவப் பொருளாக மாறுகின்றாள்; தலைவி தன்னிலை பெரிதென் றுணராமல், தானடைதற்குரிய விடம் பேருட்டிறன் வாய்ந்த தென்ற வெண்ணம் கொள்வாராகின்றாள். தலைவியின் நெகிழ்ச்சிக்குப் பெறும் பரிசு தலைவன் தாள் போற்றி யடைதலேயாகும்.

திருவாரூரில் கோயில் கொண்டிலங்கும் தியாகராயப் பெருமானைக் கண்டு, பின்வருவருமாறு தலைவி திருவாய் மலர்வதாகத் திருநாவுக்கரசர் அருள்தலைக் காணலாம். தலைவி, முன்னர் பெருமானின் திருநாமத்தைக் கேட்டாள்; பின்னர் அப்பெருமானின் திருவண்ணம் எத்தகையதெனக் கேட்டாள்; அவள் தன்னிலையினின்றும் பிறழ்ந்து, அவனிடத்தே பித்துக் கொண்டவளானாள்; தன்னுடைய ஆசாரபந்தங்களினின்றும் அகன்றாள்; தலைவனின் பெருமையையும், இருக்கையையும், பேரருட் கருணை வாய்ந்த திறத்தையும், அறிந்தவக் காரணத்தால், தன்னையுமறந்தாள்; தான் அப் பெருமானோடு செய்தவத்தால் சேர்தலால், தன் நாமமும் அப்பெருமானோடு கெடச் செய்து கொண்டாள்; தலைவன் தாளுக்கே ஆட்பட்ட அன்னாள், வழிபாட்டு நிலையான், அகத்துறையின்பம் மீதூர அவனானாள். இஃதோர் அகத்துறைப் பாட்டு.

"முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்,
மூர்த்தி யவனிருக்கும் வண்ணம் கேட்டாள்
பின்னை யவனுடைய வாரூர் கேட்டாள்,
பெயர்த்து மவனுக்கே பிச்சி யானாள்;
அன்னையையு மத்தனையும் அன்றே நீத்தாள்,
அகன்றா ளகலிடத்தா ராசாரத்தைத்,
தன்னை மறந்தாள் தன்னாமங் கெட்டாள்,
தலைப்பட்டாள் நங்கை தலைவன் றாளே!

—அப்பர்–தேவா–திருவா–7

(2) இனித் திருஞான சம்பந்தர் வழிபாட்டின் மூலம் அகத்துறை யருட் பேற்றின்பத்தைப் புகட்டுதற்கும், தொல்காப்பியர் அகத்திணை யியற் களவு நெறிக்கும் உரித்தான நேர்மை ஈதெனக் காண்மின்! சிவபெருமான், சண்பை வேந்தர்க்குத் திருவாய்மூரில் அம்பிகையுடன் கூடியாடும் ஆடல் காட்டினார். அதைத் திருஞான சம்பந்தர் கண்டு போற்றப் பாடியருளியது திருவாய்மூர்த் திருப்பதிகமாகும். இப்பதிகத்தின் முதற்பாவில் அகத்துறை விளக்கம் இருத்தற் கண்டின்புறத் தகுந்ததாகும்.

உண்ணாமுலையாள் பாடக் கேட்பதில் சிவபெருமானுக்கு ஆசை அதிகம். பாடலைக் கேட்டுக் கூடி நின்றாட வேண்டும் என்பது சிவனாரின் ஆசை. பாடலைப்பாட, அதைக் கேட்டு அருள் சுரக்க வேண்டும் என்பது பெம்மானின் கருத்தியல். பாடற்செயல், பெரிதுவக்க வைக்கின்றது பெம்மானை. இதனால், சிவனுக்கு, உமை பாடுவதைக் கேட்பதில் இன்பத்தின் எல்லை அளவுக்கு மேம்பட்டு நின்றது. இக்காரணத்தால், சிவபெருமான், உமையம்மைக்குத் தண்ணருள் பாலித்துத் தன்னுடன் கூடச் செய்து இருக்கை யீகின்றான் எனகின்ற அகத்துறைப் பண்பு பின் வரும் தேவாரத்துள் புதையுண்டு கிடக்கின்றது.

"தளிரிள வளரென வுமை பாடத்
தாளமிட வோர் கழல் வீசிக்,
கிளரிள மணியர வரை யார்த்,
தாடும் வேடக் கிறிமையார்,
விளரிள முலையவர்க் கருணல்கி,
வெண்ணீ றணிந்தோர் சென்னியின்மேல்,
வளரிள மதியமொ டிவராணீர் !
வாய்மூரடிகள் வருவாரே."!

—திருஞா–தேவா–பதி–247–பா–1

(3) தொல்காப்பியரின் வழியினைப் பின்பற்றி யெழுதல் நேர்ந்ததே இறையனாரகப் பொருளிலக்கணமாகும். இவ்விலக்கணத்தின் துணைகொண்டுதான், சுந்தரர் தேவாரமொன்றில் அகப் பொருளிலக்கணந் தோன்றுகிறது. ஒருகால் மலையரையன் பொற் பாவைக்கும், எம்பெருமானார்க்கும் ஊடல் நேர்ந்தது. அதன் விளைவாக அம்மையார் பெருமானைவிட்டு விலகித் தவமேற் கொண்டார். இங்ஙனம் ஊடற் செய்கையை இலக்கண வாசிரியர்கள் நன்கு வலியுறுத்திக் கூறுகின்றனர். எம்பெருமானும், பெருமாட்டியும், தமிழிலக்கண இலக்கிய வழித்தாய் நின்றொழுகியமையை யுணர்த்துதல் நன்றாம்.

" உணர்ப்புவயின் வாரா ஊடல் தோன்றிற்
புலத்தல் தானே கிழவற்கும் வரையார். "

—இறையனர்-சூத்-50

" உணர்ப்புவரை யிறப்பினுஞ் செய்குறி பிழைப்பினும்
புலத்தலு மூடலும் கிழவோற்குரிய. "

—தொல்-கற்பு-சூத்-15

ஊடல் தோன்றியதாற்றான், தவமேற் கொள்ளுகின்றார் உமையம்மையார். இங்ஙிலே தமிழிலக்கிய மரபொட்டியதாகும். ஊடலும், கால நீடிப்பு செய்வதால், எல்லா வகையானும் துன்பந் தோற்றுவிக்குமென் றஞ்சி, தலைமகன் ஊடல் நீங்குவது இலக்கிய மரபு. அங்ஙனமே, சிவபெருமானும், உமையம்மையின் ஊடலை நீக்கியருள் பாலிக்கின்றார் என்பதைப் பின்வரும் தேவாரத்தால் உணரலாம்.

" குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு,
குறிப்பினொடுஞ் சென்றவடன் குணத்தினை நன் கறிந்து,
விரும்பும் வரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த,
விண்ணவர்கோன், கண்ணுதலோன் மேவியவூர் வினவில்,
அரும்பருகே சுரும்பருவ வறுபதம்பண் பாட,
வணிமயில்க ணடமாடு மணிபொழில்சூ ழயலின்,
கரும்பருகே கருங்குவளை கண்வளருங் கழனிக்
கமலங்கண் முகமலருங் கலையநல்லூர் காணே!

—தேவா-சுந்-பா-1

(4) இனித் திருவாசகத்தார், தொல்காப்பியனாருக்கும் இறையனாரகப் பொருளுக்கும், அரண் செய்கின்றாரோ? என்பதை யீண்டாய்வோம். மணங்கள் தமிழ் நாட்டில் எண்வகை நிலையான் நிகழ்ந்தன வென்பதைத் தொல்காப்பியர் கூறியுள்ளார். அங்ஙனே, இறையனாரகப் பொருளாரும், மணங்களை யெண்வகையினவென வகுத்துரைத்துள்ளார். எண்வகை மணப் பிரிவுகளாவன:—

" அறநிலை யொப்பே பொருள்கோள் தெய்வம்,
யாழோர் கூட்டம் அரும் பொருள்வினையே,
இராக்கதம், பேய்நிலை யென்றிக் கூறிய

மறையோர் மன்றலெட்டவை யவற்றுள்,
துறையமை நல்லியாழ்த் துணைமையோர் இயல்பிதன்,
பொருண்மை யென்மனார் புலமை யோரே"!

—இறையனாரகப் பொருள்

"எண்வகை மணங்களில், நான்காவதாயமைவது, தெய்வம்:—இத் தெய்வ மணத்தைப் பற்றி நக்கீர தேவர் கூறுவதாவது." "வேள்வி ஆசிரியர்க்கு வேள்வித்தீ முன் வைத்துக் கொடுப்பது; இதனைத் தெய்வம் என்று வழிபட்டது."
(இறையனா ரகப் பொருளுரை)

மேற்கண்ட தெய்வ மணத்தையே யேற்றான், கண்ணுதற் பெருங் கடவுளான சிவபெருமானென்பதைத் திருவாசகம் உணர்த்துகிறது. "இமய வெற்பின் பொற்பாவையும், வாள்போலும் நுதல் பெற்ற பெண் திருவினளை, உலகமெல்லாம் அறிந்து போற்றும் வண்ணம், எரியோம்பி மணமேற்றான் எம்பெருமான்." இதனாலுணர்வதென்னையெனின், பண்டைய மணமுறை வழக்கு பற்றியே பெருமானும், வழக்கிழியா வண்ணம், வளமுற அவ்வழி நாடி நன்மை யேற்றானென்பது போதரும். இத் தொல்காப்பியர் வழங்கே திருவாசகத்தின்கண் தெற்றெனத் தெளிதலியல்பு.

" மலையரையன் பொற்பாவை வாணுதலாள் பெண்டிருவை,
உலகறியத் தீவேட்டான் என்னுமது வென்னேடி!
உலகறியத் தீவேளா தொழிந்தனனேல் உலகனைத்தும்,
கலைநவின்ற பொருள்களெல்லாங் கலங்கிடுங்காண்
சாழலோ."

—திருவா—திருச்சாழல்-13

உலகறியத் தீவேட்டு, அம்மையை மணந்தான், எம்பெருமான். அம்மை சத்தி வடிவினள்; அத்தாய் நவசத்தியின் பேரருட் குணநிறைவுகள் பூண்டவள்; சிவ சத்தியானது பராசத்தியின் வடிவினு ளடங்குவது; பராசத்தியும்,

சிவ சத்தியின் நிலையினுக்குட்பட்டது. இரு சத்திகளும் ஒருங்கிணைந்த செயலே பெருமானார், மணமேற்ற நிலையினைக் குறிப்பிடுவதாகும். திருவாசகம் என்னும் தித்திக்கும் தேனமுதளித்த மாணிக்க வாசக அடிகளார் சத்தியின் நிலைப் போக்குகளை உன்னி உணர்த்துதல் ஈண்டறிந் தின்புறத் தகுவதாகும்.

“உமையொரு பாகத்தன்” என்று சிவபெருமானை எல்லா சைவ சமய நூல்களும் கூறுகின்றன. உமையம்மையின்றி, எத்தகைய தொரு தொழிலும், அஃதாவது, ஆக்கல், அழித்தல், அருளல், முதலாம் படைப்புக்கள் சிவபரம்பொருளால் நிகழ்த்தப் பெறுவதின்று. அதனாற்றான் மாணிக்க வாசக அடிகளாரும், உடையவளாகிய வுமையம்மையார், சிவபரம் பொருளாகிய உன்றன் நடுவிருக்கும், என்கின்றார். இத்தன்மை யாங்ஙன முளதோ வெனின், ஈருடலோருயி ரென வொன்றிக் கலத்தல் போலதாம். சிவத்தின் தன்மையோ பராசத்தியினு ளடக்கம். இதனால் நாமுணர்வதாவது, மணமேற்ற தலைவனும, தலைவியும், இலக்கியத்துறையி லொன்றிக் கலந்து இருவரு மொத்து, இல்வாழ்க்கைத் தோணியைச் செலுத்திச், சிறப்பு மீதூர்த லொத்து, எம்பெருமானும், பெருமாட்டியும, இருவருமி யைந்து சத்தி வயத்தா னுலகியற் படைப்புக்களை நிகழ்த்து கின்றனரென்கின்ற வுண்மை போதருகின்றது. அத்தகு சிவமும்=சத்தியும், ஆகிய விரண்டும், என்னுள் நடுவே விளங்குந்தன்மையவை. அங்ஙனம் விளங்குவதானால், அடியேன் உன் அடியவர் திருக்கூட்டத்தின் நடுவிலிருக்கும, அருளைப் புரிவாய் பெருமானே! என வேண்டுகின்றார் திருவாதவூரடிகளார். பின்வரும் திருவாசகப் பாவும் அகத்துறையிலக்கணத்திற் கொன்றியது.

“உடையாள் உன்றன் நடுவிருக்கும்,
உடையாள் நடுவுள் நீயிருத்தி,
அடியேன் நடுவுள் இருவீரும்,
இருப்ப தானால் அடியேனுன்,

அடியார் நடுவுள் இருக்குமரு
　　ளூப்புரி யாய்ப் பொன் னம்பலத்தெம்,
முடியா முதலே யென் கருத்து
　　முடியும் வண்ணம் முன்னின்றே.''

—திருவா-கோ. மூ. தி-1

உ ட ற் கூ று

(மா. ப. தியாகராசன் பீ.ஏ.)

முன் சித்தாந்த இதழில் ஐம் பூதங்களின் இயக்கம் கண்டோம். நம் உடற் கூற்றை எடுத்துக் கொள்வோமே யானல் அங்கும் அதேவித இயக்கத்தைக் காணலாம். இந்த உடலிலுள்ள தசை பிருதிவி தத்துவமெனக் கொள்ளின் இதை இயக்குவது நீர் வடிவமான உதிரம். உதிரத்தை நம் உடலில் குழாய்கள் மூலம் பாயச் செய்வது மூச்சு அல்லது காற்று. மூச்சுவிட உடலிலுள்ள கனல் உதவி புரிகிறது. உடல் சூடு குறைந்து சில்லிட்டு விட்டால் மூச்சு நின்று விடும். ஆகாயத்தில் இப்பூமி உட்பட எல்லாக் கிரகங்களும் சுற்றி வருவதைக் காணலாம். அந்த வேகத்தில் எழுவதே கனல். அந்த ஆகாயத்தின் வேகம் ஒரு ஒழுங்குக்குட்பட்டு இயங்குவதால் அதனினும் நுண்ணிய (சித்) ஆகாயம், அதாவது அறிவு சக்தியாய இறை சக்தி ஆகாய தத்துவத்தையும் இயக்கிக் கொண்டிருக்கிறது. முடிவில் எல்லா இயக்கங்களுக்கும் காரணம் அந்த வாலறிவனென்பது பெறப்படும். இதனல்

　　கடலின் நஞ்சமு துண்டவர் கைவிட்டால்
　　உடலி னார்கிடந் தூர்முனி பண்டமே

என்று அப்பர் பெருமான் கூறிப் போந்துள்ளார்.

காற்றும் கனலும் உள்ளும் புறம்புமாய் நிலவி இவ்வுடலை நடமாடச் செய்கின்றனவெனின் இதன் வளர்ச்சிக்கு வேண்டிய உயிர்ச் சக்தி ஆகாய தத்துவத்தினின்

றும் உதிப்பதேயாகும். இது ஐம்புலன் வழி நின்று அறியும் ஆற்றலைப் பெறுகிறது. மனித உருவில் இந்த ஐயறிவையும் தொகுத்து இனையதென விளக்கும் ஆறறிவாய பேசும் தன்மை அமைந்துள்ளது. உயிர் தானே அறியும் ஆற்றல் பெற்றிருப்பின் மறதி நிலை என்பதொன்றிருக்காது. எனவே அறிவிக்க அறியும் தன்மையால் நினைப்பும், மறதியும், விழிப்பும், உறக்கமும் உயிரின் அனுபவமாக இருந்து வருகிறது. இருதயம் சுருங்கி விரிவதால் காற்று உள்ளேயும் வெளியேயும் நடமாடுகிறதா? அல்லாது காற்று அவ்வாறு இயங்குவதால் இருதயம் சுருங்கி விரிகிறதா? என்று நோக்குமிடத்து காற்றின் போக்கு வரத்து நின்றுவிடில் இருதயம் நின்றுவிடும். இருதயம் ஜடப்பொருள் எதனால் தான் இயங்குகிறோம் என்பதை உணராது. ஆனால் உயிர் அறியும் தன்மை உடையதாதலால் தன்னை அறியவைக்கும் இறைவனை உணரவல்லது. தானே இவ்வுடலை இயக்குகிறோம் என்ற 'தான்' என்ற ஆணவ நினைவு நீங்கிடில் அது இறைசக்தியை உணர முடியும். காற்று உள்ளும் புறம்புமாய் நிலவாது உள்ளுக்குள்ளேயே யோகசாதனையில் நின்று விடுமானால் யோகிகளின் தேகம் அழிவுறாது சமாதி நிலையிலிருப்பதைக் காணலாம். அதுபோல நினைப்பு, மறப்பு என்ற நிலை நீங்கி நினைவாகவே நின்றுவிடில் அதுவே முத்தி நிலை. தூங்காமல் தூங்கி சுகம் பெறும் நிலை. இறைவனுடைய நினைவாகவே நின்று அதனால் ஏற்படக் கூடிய இன்ப அனுபவத்தில் நிற்றலே பேரின்ப நிலை. ஐம்புலன்களைச் சார்ந்து அறியும் நிலை மாறி இறைவனைச் சார்பு கொண்டு பெறும் அறிவே ஞானம். நம் சிந்தைவாய்ப் பாய்வது ஐம்புலனறிவேயாகும். மாணிக்கவாசகர் சிந்தைவாய்ப் பாய்ந்தது சிவ புரத்தரசேயாகும். 'சிந்தைவாய்ப் பாயும் சிவபுரத்தரசே' என்று பாடுகிறார் அவர்.

தண்ணீர் சாளரத்தின் வழி செல்லவில்லையானால் குப்பை செத்தை அடைந்து கிடக்கும் என்றுணர்ந்து அவற்றை நீக்கித் தண்ணீர்ப் பாய்ச்சுதல் போல, மனத்துக்கண் ஐம்புலனறிவால் பொதிந்து கிடக்கும் விஷயாதிகள் நீங்கிடில் சிந்தைவாய்ப் பதி அறிவு பாய்வதற்கிட

முண்டு. தென்னவன் நன்மறை நால்வர்க் கன்றருளினன் என்பது அன்றல்ல இன்றும் ஓதிக் கொண்டுதானிருக்கிறன். அதை நாம் ஏற்காதது அவன் குற்றமன்று. புலன்வழி அறியும் தன்மையில் உயிர் நிற்றலால் அவ்வழியேனும் அருள் வாக்குகளைக் கேட்டு பண்படட்டும் என்று நான்கு பரமாசாரியர்களின் மூலம் தேவார திருவாசகங்களை இறைவன் அருளியுள்ளான். வாயினால் அவற்றைப் பாடியும் செவியினால் அவற்றைக் கேட்டும் பதி அறிவைப் பெறலாம். நம் தீவினைகளைப் போக்கும் நல்வினை இதுவேயாகும். எனவே திருமூலர் பின்வருமாறு பாடியருளியுள்ளார்.

" சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிட தீ வினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே ".

திருப்போரூர்ச் சந்நிதி முறை

(வித்துவான் அம்பை இரா. சங்கரனார்)

திருப்போரூரிலுள்ள முருகப் பெருமான் மீது ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் பாடியருளிய நூல் திருப்போரூர்ச் சந்நிதி முறையாகும். 'சந்நிதி முறை' என்ற பெயரமைப்பை முதன் முதலில் தோற்றுவித்த பெருமை நம் சுவாமிகளுக்கே உண்டு. இதன் பின்னரே திருத்தணிகைச் சந்நிதி முறை முதலிய நூல்கள் தோன்றலாயின. இத் திருப்போரூர்ச் சந்நிதி முறை இற்றைக்கு ஏறக்குறைய முந்நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீ சிதம்பர சுவாமிகளால் பாடப் பட்டதாகும்.

இது முதலில் ஏட்டு வடிவிலிருந்து பின்னர் அச்சு வாகனமேறிற்று. ஜாண மர்டாக் என்னும் ஆங்கிலேயர் 1865ல் அக்காலத்தில் வெளிவந்துள்ள தமிழ் நூல்களையெல்லாம் ஒழுங்கு படுத்தி ஒரு அகராதி வெளியிட்டார். அந்நூலகராதியில் திருப்போரூர்ச் சந்நிதி முறையும் இடம்

பெற்றுள்ளது. 106 பக்கங்களைக் கொண்டதாய் நான்கணுவுக்கு விற்கப்பட்டுள்ளதென அவ்வகராதியில் குறிப்புக் காணப் பெறுகிறது. ஆகவே 1865க்கு முன்னரே சந்நிதி முறை அச்சு வாகனமேறிற்று எனத் தெரிகிறது.

(1) மேற் குறிப்பிடப் பெற்ற நூல் யார் பதிப்பு எனத் தெரியவில்லை. இதனைத் தவிர,

(2) காஞ்சிபுரம் சபாபதி முதலியார் பதிப்பு; பிரபாகர அச்சகம், சிந்தாதிரிப் பேட்டை; (ஆனந்த வருஷம்) 1854; 112 பக்கங்களுடன் வெளியாகியுள்ளது. இது ஜான் மர்டாக் நூலகராதியில் சேர்க்கப் பெறும் வாய்ப்பினைப் பெறவில்லை போல் தெரிகிறது. மேலும்

(3) ஒரு மர அச்சுப் பதிப்பு; மிகவும் பழமை வாய்ந்ததாகவும் சிறப்பாகவும் உள்ளது; 114 பக்கங்கள் கொண்டதாய் வெளிவந்துள்ளது. அதன் பதிப்பாசிரியர் முதலிய ஒன்றையும் அப்பதிப்பிலிருந்து தெரிந்து கொள்ள வாய்ப்பில்லை.

(4) வே. குமாரசாமி ஐயர் அண்டு சுப்பு அருணாசல குருக்கள்; புதுவை லட்சுமி விலாச சாலை; 1871.

(5) ஊ. புஷ்பரதச் செட்டியார்; கலாரத்நாகரம் அச்சுக் கூடம்; 1871 நவம்பர்; முதற்பதிப்பு.

(6) பு இ. பரசுராம முதலி. பரப்பிரம்ம அச்சியந்திரசாலை, சென்னை; 1881 அக்டோபர்; இரண்டாம் பதிப்பு.

(7) ஊ. புஷ்பரதச் செட்டியார்; கலாரத்நாகரம் அச்சுக் கூடம்; 1885 செப்டம்பர்; மூன்றாம் பதிப்பு.

(8) T. K சுப்பராயச் செட்டியார் தம் உரையுடன்; ஸ்டார் ஆப் இந்தியா பிரஸ், சென்னை; 1892; ஜூனில் முதல் பாகமும், ஆகஸ்டில் இரண்டாம் பாகமும், மூன்றாம் பாகமும் வெளியாயின. இவ்வுரை நூலில் முதல் இரண்டு பாகங்கள் 96 பக்கங் கொண்டது. இலண்டன் பிரிட்டிஷ் மியூசியத்திலுமுள்ளது என அங்குள்ள நூலக

ராதியிலிருந்து தெரிகிறது. இவர் முதல் பாட்டிலிருந்து மட்டுவிருத்தம் 'உவமையறு'' என்னும் செய்யுள் முடிய 426 பாக்களுக்கு உரை யெழுதியுள்ளார்.

(9) காஞ்சி ஆலால சுந்தரம் பிள்ளை அவர்கள் உரையுடன்; மயிலை செந்தில்வேலு முதலியார் பதிப்பு; இந்து தியாலாஜிகல் அச்சகம்; சென்னை; (விஜய வருஷம்) 1893. இவர் மட்டுவிருத்தம் ''மயக்கமிடர் காணு'' என்னுஞ் செய்யுள் முதல் நூல் முடிய 300 செய்யுள்களுக்கு உரை எழுதியுள்ளார். இவ்விருவருரையும் சேர்ந்து 524 பக்கங்களுடன் வெளியாயிருக்கின்றது.

(10) அமரம்பேடு இரங்கசாமி முதலியார் சன்ஸ் பதிப்பு; பூமகள் விலாஸ அச்சுக் கூடம், சென்னை; 1927.

(11) சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை; திரு. வி. உலகநாத முதலியார் மணிவிழா வெளியீடு; சாது அச்சுக் கூடம், சென்னை-14; 1941; சிதம்பர சுவாமிகள் இயற்றிய எல்லாச் செய்யுள் நூல்களும் ஞானியார் அடிகள் (சந்நிதி முறைக்கு மட்டும்) குறிப்புரையுடன் வெளியாயிற்று.

(12) சைவ சித்தாந்த மகா சமாஜம், சென்னை; சாது அச்சுக் கூடம், சென்னை-14; 1948; சந்நிதி முறை மட்டும் ஞானியாரடிகள் குறிப்புரையுடன் வெளியாயிற்று.

இவற்றுள் மூன்றாவதாகக் குறிப்பிடப் பெற்ற மர அச்சுப் பதிப்பு நூல்தான் மிகவும் போற்றத்தக்க நிலையிலுள்ளது. சிறிதும் பிழைகளின்றித் திருத்தமுற அக்காலத்து அச்சிடப்பட்டிருக்கின்றது. முன்னருள்ள சில பக்கங்கள் காணப் பெறவில்லையாதலின், யாரால் பதிக்கப்பட்டது? பதிப்பிக்கப்பட்ட காலம் யாது? முதலியன தெரிய வாய்ப்பில்லை.

மேற் குறித்தவை தவிர வேறும் பல பதிப்புகள் வெளிவந்திருப்பதாகத் தெரிகின்றோம். அவ்வாறு வெளிவந்தவைகள் பற்றி யாருக்காவது தெரியின் அப்பதிப்புகளைப் பற்றிய விளக்கங்களைத் திருப்போரூர் தேவத்தானத்தாருக்

கோ அல்லது அடியேனுக்கோ தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். திருப்போரூர் தேவத்தானத்திலிருந்து சந்நிதி முறைப் பதிப்பு ஒன்று மிகவும் நன்முறையில் அண்மையில் வெளிவர இருக்கின்றது. ஆகவே அன்பர்கள் இப்பதிப்புக்களைப் பற்றிய விவரங்களைத் தெரிவித்தால் மேலும் பல செய்திகள் தெரிய வாய்ப்பிருக்கும். தக்கவர்கள் ஆவனவற்றைத் தெரிவிப்பார்களாக.

மதிப்புரை

"தேவாரத்தல வணக்கம்" என்னும் நூல் ஒன்று வரப் பெற்ருேம். இது காரைக்குடி சிவநேசர் திருக்கூட்டத்தாரால் 1959ல் வெளியிடப் பெற்றது. தேவாரம் பெற்ற திருத்தலங்கள் 275க்கும் 275 அடிகளைக் கொண்டு போற்றி என்று ஒவ்வொரு அடியிலும் ஈற்றுச் சீர் பெற்று மிளிர்கின்றது. இந்நூலை ஆக்கியவர் காரைக்குடி சொக்கலிங்க ஐயா அவர்கள் அருமை மைந்தர் உயர்திரு. திருநாவுக்கரசு செட்டியார் அவர்கள் ஆவர். இந்நூலின் மூன்ரும் பதிப்பு தற்போது வெளிவந்துள்ளது. இது தேவாரம் பாடல் பெற்ற தலங்களைப் பற்றி நினைவு கூர்தற்கு மிகவும் துணை செய்ய வல்லது. வேண்டுவோர் காரைக்குடி சிவநேசர் திருக்கூட்டச் செயலாளருக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். விலை குறிக்கப் பெறவில்லை.

(அம்பை)

"அன்பு மலர்" (பாராயணத் திரட்டுடன்) என்னும் நூல் ஒன்று வரப் பெற்ருேம். இது ஈழ நாட்டிலுள்ள சித்தங்கேணி உறுநாவலைப் பெரியார் திரு. சி. மு. முத்தையன் அவர்களால் தம் அருமைத் தாயார் திரு. மதி முத்துக்குமாரு அன்னபூரணியம்மையார் அவர்கள் நினைவாக வெளியிடப் பெற்றது இந்நூல் அன்பியல, அறவியல், ஒழிபியல் என்னும் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப் பெற்று, ஒவ்வொரு இயலிலும் 40, 22, 35 தலைப்புக்களில்

முறையே அவ்வத் தலைப்புக்களுக்கேற்ப பாடல்களையோ கருத்து விளக்கங்களையோ கொண்டு சிறந்து விளங்குகின்றது. இறுதியாகப் பாராயணத் திரட்டில் நாள் வழிபாட்டுக்குரிய சிறந்த திருமுறைப் பாடல்களும் தொகுத்து வைக்கப்பட்டுள்ளன. பதிப்பாசிரியர் மிகவும் அரிதின் முயன்று இந்நூலை வெளியிட்டுள்ளார். தக்கார் பலர் மதிப்புரைகளையும் பதிப்பாசிரியரின் பதிப்புரையையும் பெற்று இந்நூல் விளங்குகின்றது. வேண்டுவோர் சி. மு. முத்தையன், உறுநாவலை, சித்தங்கேணி, சிலோன் என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். விலை ரூ. 3–00. (அம்பை)

''இந்து சாதனம்'' 75-வது ஆண்டு நினைவு மலர்; யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையாரால் நடத்தப் பெறும் இந்து சாதனம் 75-ஆவது ஆண்டு நினைவு மலர் வரப்பெற்றோம். சைவ பரிபாலன சபை ஈழத்தில் ஆற்றிவரும் சமயத் தொண்டு தமிழ் கூறும் நல்லுலகம் நன்கறிந்ததொன்றே. அதனால் நடத்தப் பெறும் இந்து சாதனம் என்னும் செய்தித் தாளுக்கு 75 ஆண்டு முற்றுப் பெறுவது பெரு மகிழ்ச்சிக் குரியதாகும். இது இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் இந்நிலவுலகில் நிலைபெற்று சைவமும் தமிழும் பரப்பித் தொண்டு செய, குன்று தோறுடும் குமரவேள் அருள் சுரக்க அவன் திருவடிகளைத் தொழுது வேண்டுகிறோம்.

இம் மலரில் 24 தமிழ்க் கட்டுரைகளும் 6 ஆங்கிலக் கட்டுரைகளும் உள்ளன. கட்டுரைகள் யாவும் மிகவும் அரிய பொருள்களைக் கொண்டு போற்றத்தக்கனவாயுள்ளன. தமிழ், சைவம் என்னும் இரு நெறிகளைப் பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்டு அக்கட்டுரைகள் மிளிர்கின்றன. வேண்டுவோர் செயலாளர், சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம், சிலோன் என்னும் முகவரிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம். விலை குறிக்கப் பெறவில்லை. (அம்பை)

மணிவிழா

நம் சமாஜச் செயற்குழு உறுப்பினரும் தாம்பரம் கிறித்தவக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமாகிய திரு. பூ. ஆலால சுந்தரஞ் செட்டியார் M.A. அவர்களுக்கு 2-11-67 அன்று 60 ஆம் ஆண்டு நிறைவு மணிவிழா சிறப்புற நிகழ்ந்தது. திரு. செட்டியார் அவர்கள் சமயப்பற்றும் மொழிப்பற்றும் மிக்கவர்கள். நம் சமாஜத்தோடு நெடுங் காலத் தொடர்புகொண்டவர்கள். பெரும்பாலும் எல்லா ஆண்டு விழாக்களிலும் மற்றும் சிறப்புக்கூட்டங்களிலும் பங்கு கொண்டு ஒல்லும் வகையான் சமயப்பணியைச் செய்து வருபவர்கள். 1936 ஆம் ஆண்டு காஞ்சிபுரத்தில் நிகழ்ந்த நம் சமாஜ 31 ஆம் ஆண்டு விழாவில் இளைஞர் மாநாட்டுத் தலைவராயிருந்தார்கள். சமய விளக்கம் குறித்துப் பல அரிய நூல்களையும் எழுதியுள்ளார்கள். கணக்கற்ற சமய விளக்க விரிவுரைகளைப் பல ஊர்களில் சென்று ஆற்றியுள்ளார்கள். காட்சிக்கு எளியர்; இன் சொல்லர். தலைவருக்கேற்ற எல்லா நற்பண்புகளும் இனிது வாய்க்கப்பெற்ற உத்தமியார் அவர் வீட்டரசியார் என்று நினைக்கும்போது அவரை ஒரு சிறந்த இல்லற ஞானியென்றே கூறலாம். இத்தகைய சிறப்புடை மணி விழாக் கொண்ட தம்பதிகள் நீடு எல்லா நற்பேறுக ளும் பெற்று இனிது வருங்காலச் சந்ததியினரைச் சமய நெறிக்கு உய்க்கும் திருத்தொண்டில் ஈடுபட்டு நன்கு வளம் பெற்று வாழ எல்லாம்வல்ல திருச் செந்திலாதிபன் திருவடியிணைகளை வாழ்த்தி அருள் சுரக்க வேண்டுகின் றோம்.

(அம்பை)

கார்த்திகை மாத விசேட தினங்கள்.

10	(26-11-67)	மெய்ப்பொருள் நாயனார் விழா
11	(27-11-67)	ஆனாய நாயனார் விழா
17	(3-12-67)	மூர்க்க நாயனார் விழா
18	(4-12-67)	சிறப்புலி நாயனார் விழா
28	(14-12-67)	கணம்புல்ல நாயனார் விழா
,,	,,	கார்த்திகை தீப விழா

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சென்னை சைவ சித்தாந்த மகா சமாஜம்

(தொடக்கம் - 1905 — பதிவு - 1915)

62-ஆம் ஆண்டு விழா

அழைப்பும் அறிவிப்பும்

ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியைஉள் நாடு.

நாத னம்மை யாள்வா னென்று நவின்றேத்திப்
பாதம் பன்னாள் பணியு மடியார் தங்கண்மேல்
ஏதந் தீர விருந்தான் வாழு மூர்போலும்
வேதத் தொலியாற் கிளிசொற் பயிலும் வெண்காடே.

—சம்பந்தர் (2 - 197 - 2)

அன்புடையீர்!

சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் **62-ஆம் ஆண்டு நிறைவு விழாவும், பொதுக்கூட்டமும், அதன் அங்கமாகச் சைவர், சைவ மங்கையர், சைவ இளைஞர் மாநாடுகளும்,** *29, 30, 31-12-67* ஆகிய வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில், **திருவெண்காடு சுவேதாரணியேசுரர் திருக்கோயிலில்** பிற்காணும் நிகழ்ச்சிநிரலில் கண்டாங்கு முறைப்படி நிகழும்.

மேலையூர் தவத்திரு. **மாணிக்கவாசக ஞான தேசிக சுவாமிகள்** சைவர் மாநாட்டிற்கும், திருமதி. **இந்திரா சோமசுந்தரம்,** எம். ஏ. அவர்கள், சைவ மங்கையர் மாநாட்டிற்கும், திரு. **கு. ஆளுடையபிள்ளை,** எம். ஏ. அவர்கள் சைவ இளைஞர் மாநாட்டிற்கும் தலைமை வகிப்பார்கள்.

சித்தாந்த சைவம் பற்றி அறிஞர்கள் பலர் சொற்பொழிவுகள் ஆற்றுவார்கள். குடந்தை, திரு.

ப. சுந்தரேசம் பிள்ளை அவர்கள் மாநாட்டு நிகழ்ச்சிகளின்போது திருமுறை ஓதுவார்கள்.

அன்பர்கள் அனைவரும் உறுப்பினரும் வந்து கேட்டு, விழாவைச் சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்குச் சமாஜ உறுப்பினர்கள் அனைவரும் வருமாறு வேண்டுகிறோம்.

இங்ஙனம் :

சமாஜத்தினர்

தலைவர் : ச. சச்சிதானந்தம் பிள்ளை

உபதலைவர்கள் :

ராவ்பகதூர் - க. அரங்கசாமி முதலியார்

கோ. மு. முத்துசாமி பிள்ளை, ஐ. ஏ. எஸ். (ஓய்வு).

செயலாளர் : சி. வடிவேல்

துணைச்செயலாளர் : மு. நாராயணசாமி முதலியார்

வரவேற்புக் குழுவினர் :

தலைவர் : K. கனகசபை பிள்ளை

செயலாளர் : T. M. சீனிவாச பிள்ளை

ஏனைய உறுப்பினர் : C. நாகலிங்கம் பிள்ளை முதலியோர்.

நிகழ்ச்சி நிரல்

(29—12—67) வெள்ளிக்கிழமை

காலை 8 மணி : சுவேதாரணியேசுரர் முன் வழிபாடு.

காலை 9 முதல் 1 மணி வரை - **சைவர் மாநாடு**

இறை வணக்கம்.

கொடியேற்றம் :

திரு. கு. வரதராஜப் பிள்ளை, பி. ஏ., திருச்சி.

வரவேற்பு உரை : திரு கே. கனகசபைப்பிள்ளை அவர்கள்

சமாஜ ஆண்டு அறிக்கை : சமாஜச் செயலாளர்.

மாநாட்டுத் திறப்பு உரை :

திருமதி. ஆர் இராதா அம்மையார் அவர்கள்.

நூல் வெளியீடு : திருவெம்பாவை - விசேட உரையுடன்
திரு. கீ. இராமலிங்கம், எம்.ஏ. அவர்கள், சென்னை.

தலைமைப் பேருரை :

மேலையூர், தவத்திரு. மாணிக்கவாசக ஞானதேசிக சுவாமிகள்

மாலை 4 முதல் 8 மணி வரை - **சைவர் மாநாடு**

இறை வணக்கம் - தலைவர் முன்னுரை.

சொற்பொழிவுகள் :

1. திரு. ரா. சண்முகசுந்தரம் செட்டியார், திருவதிகை. —**பண்காட்டிப் படியாய தன் பத்தர்**
2. திரு. வ. ஆ. தேவசேனாபதி, எம். ஏ., சென்னை. —**மெய்கண்டார் நெறி**
3. திரு. முரு. பழ. இரத்தினஞ் செட்டியார், மலேயா. —**அழிவில் தவம்**

தலைவர் முடிவுரை. வாழ்த்து.

(30—12—67) **சனிக்கிழமை**

காலை 8 மணி : வழிபாடு.

காலை 9 முதல் 11-30 மணி வரை - அண்மையிலுள்ள திருத்தலங்களில் வழிபடுதல்.

பிற்பகல் $2\frac{1}{2}$ முதல் $4\frac{1}{2}$ மணி வரை :

சமாஜ உறுப்பினர் ஆண்டுப் பொதுக்கூட்டம்

மாலை 5 முதல் 8 மணி வரை - **சைவ மங்கையர் மாநாடு**

தலைமைப் பேருரை :

திருமதி. இந்திரா சோமசுந்தரம், எம். ஏ. அவர்கள்.

சொற்பொழிவுகள் :

திருமதி. ஈசுவரவடிவு அம்மாள், தூத்துக்குடி.
—**மங்கையர்க்கரசியாரும் திலகவதியாரும்**

திருமதி. மீனாட்சிசுந்தர சிவை அவர்கள், சென்னை.
—**திருமுறையும் அருமறையும்**

தலைவர் முடிவுரை, வாழ்த்து.

(31—12—67) ஞாயிற்றுக்கிழமை

காலை 8 மணி : வழிபாடு.

காலை 9 முதல் $11\frac{1}{2}$ வரை - அண்மையிலுள்ள திருத்தலங்களில் வழிபடுதல்.

மாலை 4 முதல் 7 மணி வரை - **சைவ இளைஞர் மாநாடு**

இறை வணக்கம்.

தலைமைப் பேருரை :

திரு. கு. ஆளுடைய பிள்ளை, எம். ஏ., சென்னை.

சொற்பொழிவுகள் :

1. திரு. சொ. சிங்காரவேலனார், மாயூரம்.
—தாண்டகப் புதுமை

2. புலவர்-திரு. இரா. செல்வக்கணபதி, சென்னை.
—சைவத்தின் இருவிழிகள்

தலைவர் முடிவுரை.

செயலாளர், வரவேற்பாளர் நன்றி உரை, வாழ்த்து.

குறிப்பு:—(1) மாநாட்டில் சமாஜ வெளியீடுகள் விலைக்குக் கிடைக்கும் சமாஜ உறுப்பினர் கட்டணம், ஆங்கில முத்திங்கள் இதழ் கட்டணம் மாநாட்டில் செலுத்தலாம். (2) தீர்மானங்களை அனுப்பும் உறுப்பினர்கள் செயலாளர், 12, கீழ மாடவீதி, மயிலாப்பூர், சென்னை-4 என்ற முகவரிக்கு 23-12-67 தேதிக்குள் அனுப்பவேண்டும். (3) சமாஜ உறுப்பினர்களுக்கு உண்டி உறையுள் வசதிகள் செய்து தரப்பெறும். முன்னரே தங்கள் வரவினை "வரவேற்புக்குழுச் செயலாளர் திரு. T. M. சீனிவாசம் பிள்ளை, திருவெண்காடு" என்ற முகவரிக்கு 25-12-67 தேதிக்குள் தெரிவிக்கவும். சமாஜ உறுப்பினரல்லாதார் உணவு வசதிக்காக ரூ. 5/- கொடுக்கவேண்டும். (4) சீர்காழியிலிருந்து திருவெண்காட்டிற்குப் பஸ் வசதி உண்டு. (5) அண்மையிலுள்ள பாடல்பெற்ற தலங்களைப் பற்றிய குறிப்புக்கள் மாநாட்டில் வழங்கப்பெறும்.

வாழ்க உலகெலாம்.

முருகன் அச்சகம், இராயப்பேட்டை, சென்னை-14